**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 29. ஸ்ரீகூர்ம தாஸர்**

---

**கூர்மாவதார ஈடுபாடு**

மஹாராஷ்ட்ராவில் ப்ரதிஷ்டாபூர் நகரம்.அவ்வூரில் வாழ்ந்த அந்தணர் தான் கூர்ம தாஸர்.பூர்வ ஜென்மத்தின் தீவினையால் அவர் பிறவியிலேயே முடவனாய்ப் பிறந்தார்.ஆனால் அவரது ஆன்மீக விழிப்புணர்வோ குதிரை வேகம் தான்.பாவ பக்தியில் தன் மனதை அதிகம் கூர்ம அவதாரத்தில் லயிக்கச் செய்தார்.கூம அவதராம் மூலம் பெருமான் தேவர்களுக்கு வேண்டி பட்ட பாட்டை எண்ணி எண்ணி அழுவார்.அவரது முதுகில் மந்தார மலையில் சீராய்ப்பும் காயமும் ரத்தமும் வழிவதாக எண்ணி எண்ணி அழுவார், மண்ணில் புரள்வார்.தனக்குக் கால்கள் இல்லை என்ற வருத்தத்தை அவர் ஒழித்துவிட்டார்.

***"கால்கள் இருந்தால் மனம் போன போக்கில் பாவ வினைகள் செய்ய ஓடும்.எனவே என் ஈசன் என்னை இவ்வாறு படைத்தனன்"*** என்றே கூறுவார்.

அவருக்கு வாழ்க்கையில் ஒரு கார்த்திகை ஏகாதசியன்று பாண்டுரங்கனை தரிசிக்கும் லட்சியம் இருந்தது.எனவே ஸ்ரீராம நாமத்தைக் கூறியபடியே ஊர்ந்து ஊர்ந்து தன் யாத்ரையைத் தொடங்கினார்.

**ஹனுமான் செய்த சேவை**

பண்டரீபுரத்துக்கு முன் ஒரு க்ராமத்தில் உள்ள ஹனுமான் கோயிலில் இவர் தங்கினார்.பல தூரம் ஊர்ந்து வந்த, களைப்பு, காயம், ரத்தம் என இவர் வாடிட, மனம் தளராது கூர்மாவதாரத்தை எண்ணி எண்ணித் தன் உடல் சீராய்ப்பு வலியை மறந்த கதியில் ஓய்வு எடுத்தார். அப்போது அவ்வூர் வாசி ஒருவர் அவரைப் பண்டரீபுரத்துக்குத் துணை நின்று அழைத்துச் செல்வதாக வந்து உதவினார்.***அவருள் இருக்கும் தூய சேவையான ஹனுமனே அவ்வன்பர் என்று உணர்ந்து பயணம் செய்தார் கூர்மதாஸ்***.

போகும் வழியில் வருளாபூரில் அவ்வன்பர் இவரை ஓர் இடத்தில் விட்டு விட்டு தனியே சென்று விடுகிறார்.மறுநாள் ஏகாதசி.மனம் கலங்கிய கூர்மதாஸ் சில அன்பர்களைப் பார்த்து, ***"கோயிலில் ஞானதேவரையும் நாமதேவரையும் பார்த்து அடியேனுக்கு வேண்டி விண்ணம்பம் செய்க! அவர்தம் அருளால் பாண்டுரங்கன் எம்மை விரைவில் தரிசனம் பெறச் செய்வான்!"*** என்று ஆழ்ந்த குரு பக்தியில் கூறினார்.

**குரு பக்தி தந்த பலன்**

கூர்மதாஸின் விண்ணப்பம் அவ்விரு குருமார்களிடம் வைக்கப்பட்டது.பூரண விழிப்புணர்வில் அவர்கள் பாண்டுரங்கனை அழைத்துக் கொண்டு கூர்மதாஸின் இடம் நோக்கிச் சென்றனர்.வழியில் பெண்டி என்ற ஊரில் சாமந்த் என்ற விவசாயியின் பாவ பக்தியில் கட்டுண்ட ஈசன் அவருள் சமாதியில் லயித்தான்.பின்னர் குருமார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி கூர்மதாஸுக்கு திவ்ய தரிசனம் தந்தான்.தன் உடல் குறையைப் போக்கும் படி அவர் வேண்டாமல், வருளாபூரில் பாண்டுரங்கன் கோயில் கொள்ள வேண்டும் என்றே வேண்டிக் கொண்டார்.அவ்வூரிலேயே இருந்து அவரும் தம் குருதேவர்கள் காட்டிய வழியில் பலகாலம் பக்தி செய்து முக்தி பெற்றார்.இன்று வருளாபூர் செல்லாமல் பண்டரீயாத்ரை முடிவதில்லை என்பது அவருக்கு நாம் தரும் மரியாதை.

பாவ பக்தியும், குரு பக்தியும், குரு மீதான நம்பிக்கையும், தன்னலம் இல்லாத ப்ரார்த்தனையும் விரைவில் ஈஸ்வர தரிசனம் ஏற்படுத்திவிடும்!

ஹரி ஓம்!